RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.54392/ijot2444

# Humanistic Thoughts in Tamilanban's Poems

**K. Radha [a,*]**

[a] Department of Tamil, Kongunadu Arts And Science College, Coimbatore-29, India

*Corresponding author Email: arjunaakash91501@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2444

Received: 20-07-2024; Revised: 04-11-2024; Accepted: 13-11-2024; Published: 22-11-2024

**Abstract:** Billions of creatures are born, live and die on this earth. Of these, the most unique and virtuous birth was the human birth. That is why Avvaiyar says that it is rare to be born as a human being. The innumerable beings who take birth from one sense to five senses are completely different from the sixth sense, the human birth. When a man who has acquired the highest knowledge of the power of thought directs that knowledge in a good way, he and the society to which he belongs; It will be beneficial. On the other hand, when he engages in inhuman activities, he brings upon himself irreparable misery and causes great harm to others with whom he works. It is said that wherever Dharma is established on this earth, there will be God's mercy. The Puranas and Epics indicate that when dharma declines and adharma rises, God takes various incarnations to establish dharma in its place. The purpose of this article is to identify and expose the various humanistic thoughts that have been taken up as the theme and subject principle in the collection of 1000 poems of Poet Thamizhanban which has been studied on the basis of this thought, while at the same time pointing out the denial of humanism and to show the high cultural values to be observed with human beings.

**Keywords:** Tamilanban, Poems, Human beings, Avvaiyar

# தமிழன்பனின் கவிதைகளில் மனிதநேயச் சிந்தனைகள்

**க. இராதா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்-29, இந்தியா

## முன்னுரை

கோடிக்கணக்கான உயிரினங்கள் இம்மண்ணுலகில் பிறந்து, வாழ்ந்து மறைகின்றன. இவற்றில் தனித்தன்மைமிக்கதாகவும் அறத்தை நிலைநிறுத்துவதாகவும் அமைந்த பிறப்பு மானுடப் பிறப்புதான். ஆதலால்தான் ஔவையார் அரிது அரிது மானுடராப் பிறத்தல் அரிது என்கிறார். ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை பிறப்பெடுக்கும் எண்ணிலடங்கா உயிர்கள், ஆறாவது அறிவாகிய மானுடப் பிறப்பிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றன. சிந்தனை ஆற்றல் என்ற உயரிய அறிவைப் பெற்ற மனிதன் அவ்வறிவை நல்வழியில் செலுத்தும்போது அவனுக்கும், அவனைச் சார்ந்த சமூகத்திற்;கும் நன்மையுடையதாகவே அமையும். அதைவிடுத்து மனிதநேய மற்ற செயல்பாடுகளில் ஈடுபடும்போது அவன் தனக்கு மீளமுடியாத துயரத்தைத் தேடிக் கொள்வதுடன் அவனுடன் இயங்கிக் கொண்டிருக்கும் பிறருக்கும் பெரும் கேட்டை விளைவிக்கிறான். இப்பூவுலகில் எங்கெல்லாம் தர்மம் நிலைநாட்டப்படுகிறதோ அங்கெல்லாம் இறையருள் குடியிருக்கும் என்பர். தர்மம் குறைந்து அதர்மம் தலைதூக்கும்போது அவ்விடத்தில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக இறைவன் பல்வேறு அவதாரங்களை எடுப்பதாக புராணங்களும், இதிகாசங்களும் சுட்டிக்காட்டுகின்றன. இச்சிந்தனையின் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட கவிஞர் தமிழன்பனின் ஆயிரம் கவிதைத் தொகுப்பில் மையக் கருவாகவும் பாடுபொருள் நெறியாகவும் எடுத்தாளப்பட்டுள்ள பல்வேறு மனிதநேயச் சிந்தனைகளைக்

கண்டறிந்து புலப்படுத்திக் காட்டுவதும், அதே சமயம் மனிதநேய மறுதலிப்புகளைச் சுட்டிக்காட்டுவதும், இவற்றின் வழியாக மானுடன் கடைப்பிடித்தொழுக வேண்டிய உயரிய பண்பாட்டு விழுமியங்களைப் புலப்படுத்திக் காட்டுவதும் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## மனிதநேயம் இருப்பும் மறைப்பும்

படைப்புலகில் படைக்கப்படுகின்ற எந்தவொரு இலக்கியமும் ஏதாவதொரு வகையில் மனிதனை நன்னெறிப்படுத்துவதாக அமைந்திருக்க வேண்டும். அந்த இலக்கியம் காலங்காலமாக வலியுறுத்தப்பட்டு வரும் அறங்களை இலைமறை காயாகப் பாடுபொருளாக்கி உணர்த்த வேண்டிய கருத்தை உணர்த்தி நிற்க வேண்டும். அப்போதுதான் அவ்விலக்கியம் காலங்கடந்து வாழக்கூடிய நிலைப்பேற்றுத் தன்மையைப் பெறும்.

“மறைக்க இடம் தேடும் மனம்” எனும் கவிதை முடிவு காண முடியாத ஆற்றலை தன்வசம் வைத்திருக்கும் பிரபஞ்சமானது மனிதனுடைய சிந்தனைகளை ஒருபோதும் மூடுவதில்லை என்பதைக் காட்டுகிறது. எந்தச் செயலைச் செய்தாலும் அதற்கு மறுப்புச் சொல்வதற்கும், ஒதுக்குவதற்கும் இச்சமூகம் காத்திருக்கிறது. பிறரின் சொல்லுக்கு அச்சப்பட்டு நிற்கும்போது ஒருவனுடைய செயல்கள் முடங்கி விடுகின்றன. நம்மை முடக்குவதுதான் பிறரின் நோக்கம் என்றால் அதற்கு ஒருபோதும் மனிதன் அடிமையாகிவிடக் கூடாது என்பதை அறிவுறுத்தும் வகையில் தமிழன்பன்,

“காற்று
மனத்தில் இருப்பதை
மலர்களிடம் சொல்ல
மறுப்பதில்லை:
எல்லாவற்றையும்
மறைத்துவிட்டுத்
தன்னை மறைக்க இடம் தேடித்
தவிக்கும் மனம்
மனிதனிடம் மட்டும்தான்”

என்ற கவிதை அடிகளில் தடைகளைத் தகர்த்தெறியும் நம்பிக்கையைத் தூண்டுகிறார் (Amirthaganesan, 2016). கடலிலிருந்து புறப்பட்டு வரும் அலைகளுக்கு எதிரில் கதைத்தொட்டுத் திரும்பி வந்து மோதும் அலைகள் பல்வேறு தடைகளை ஏற்படுத்தினாலும் அந்த அலைகளின் வேகம் தடைபடுவதில்லை என்பதையும் அதைப் போலவும் கனன்று கொண்டிருக்கும் எரிமலையின் இதயத்தில் குடிகொண்டிருக்கும் ஆற்றலைப் போல மனிதன் தன் வாழ்க்கைப் பயணத்தில் தன்னை மறந்துவிடாமல் தன் இருப்பிடத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதையும் கவிஞர் வலியுறுத்துகின்றார்.

வாழ்க்கை நேர்மறை மற்றும் எதிர்மறையாகிய இரு கூறுகளால்தான் இணைக்கப்பட்டுள்ளது. நேர் மறை எண்ணங்களைச் செயல்படுத்தும்போது வரக்கூடிய பல்வேறு தடைகளைத் தகர்த்தெறிந்துவிட்டு முன்னோக்கிச் செல்லும் ஆற்றல் மனிதனுக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் சாதாரண மனிதனாக இல்லாமல் சாதனையாளராகவும் மனிதருள் மாணிக்கமாகவும் ஒளிவீச முடியும்.

“மின்மினிக்காடு” என்னும் கவிதையில் கவிஞர் தமிழன்பன் வாழ்வின் அர்த்தத்தைப் புலப்படுத்திக் காட்டும் நோக்கில் அறிவுரைகளை வழங்குகிறார். ஒவ்வொரு படிக்கட்டாகக் கடந்து வரும் வாழ்க்கையில் எத்தனையோ வாய்ப்புகள் கிடைத்தபோதும் அவற்றைச் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோம் என்றால் மீண்டும் அந்த வாய்ப்புக் கிடைக்காது என்பதை,

"கையில்

பூங்கொத்தோடு உன்

கடைசி நாள் வரும்போது

கதவைச் சாத்தி வைக்காதே!

எழுந்து போய்த் திறக்க

உன்னால்தான் முடியாதே"

என்ற அடிகளில் குறிப்பிடுகின்றார் (Amirthaganesan, 2016). வாழ்வதற்கும், சாதிப்பதற்கும் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொள்வது ஒரு வகை; தானாகத் தேடி வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது ஒருவகை. மரணம் மனிதனைத் தழுவும் முன்பு சாதனைகளை அவன் தழுவிக் கொள்ளும்போதுதான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாறுகிறது என்பதை இக்கவிதை அறிவுறுத்துகிறது.

மேலும், "விகிதாச்சாரம்" என்னும் கவிதையிலும் புன்னகை எனும் ஆயுதத்தைக் கொண்டு எதிர்வரும் தடைகளை வென்றுவிட முடியும் என்பதை,

"நூறு ரோஜாக்களின்

அர்த்தங்களைக்

கூட்டினால் - அது உன்

ஒரு புன்னகையின் பாதி.

இருநூறு ரோஜாக்களின்

அர்த்தங்களைக்

கூட்டினால் - அது உன்

ஒரு புன்னகையில் கால்"

என்ற கவிதை அடிகளில் சுட்டிக்காட்டி, நன்மையோ, தீமையோ அது கண்முன்னால் நிற்கும்போது அதை ஏற்றுக் கொள்கிறோமா அல்லது அதை மறுக்கிறோமா என்பது ஒருபுறம் இருக்க, ஒரு சிறிய புன்னகையை உதிர்த்துவிட்டு அவ்விடத்தைக் கடக்கும்போது அந்தச் சிக்கல் தானே மறைந்துவிடும் என்று வழிகாட்டுவதை உணரமுடிகின்றது (Amirthaganesan, 2016).

## மானுட பிறப்பின் மேன்மை

அறம் எது என்பதைச் சரியாக உணர்ந்து கொண்டு, அதேசமயம் அறம் அல்லாதனவற்றிலிருந்து விலகி நின்று குறிக்கோள் வாழ்க்கையை வாழ்பவன்தான் மனிதன். அத்தகைய குறிக்கோள் வாழ்க்கையில் எத்தனை தடைகள் வந்தாலும் அந்தத் தடைகளை எல்லாம் தகர்த்தெறியக் கூடிய ஆளுமை ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிறதென்பதை அவன் எப்போது உணர்ந்து கொள்கிறானோ அப்போதுதான் அவன் சாதாரண மனிதனில் இருந்து உயர்வு பெற்றுச் சாதனை மனிதனாக மாறுகிறான். அப்படி அவன் வெற்றியாளனாக முன்நிற்கும்போது இந்த உலகம் அவனைப் பாராட்டும். கோடான கோடி மக்களுக்கு மத்தியில் ஒருவன் மட்டும் பாராட்டப்படுகிறான் என்று சொன்னால் அது அவனுடைய கடினமான உழைப்புக்கும், அவனுடைய ஈடு இணையற்ற அர்ப்பணிப்புக்கும் கிடைத்த பரிசாக இருக்கும் என்பதைக் கவிஞர் தமிழன்பன்,

"இருளோடவன் போராடினான்

ஒளியாவதை எடுத்தோதினான்

வெகுளாதுளம் துணிவூட்டினான்

விலங்காகிய பகை ஓட்டினான்

புதிரானவை வென்றானவன்

புகழ்வான்மிசை நின்றாவனவன்

மதியாலவன் விதிமாற்றினான்

மகிழ்வாய்ப்புதுச் சுதி கூட்டினான்"

என்ற கவிதை அடிகளில் தெளிவாக்குகிறார் (Amirthaganesan, 2016). உண்மை என்பது எப்போதும் சற்று கசப்பானதுதான். ஆதனால் பொய்க்கு இருக்கக்கூடிய ஈர்ப்பு உண்மைக்கு சற்றுக் குறைவாகத்தான் இருக்கும். ஆனால் உண்மை எப்போதும் நின்று நிலைபெறும். மனதில் வஞ்சம் இல்லாமல் எல்லோரிடமும் பழகக்கூடிய ஒருவன்தான் நிறைவான மனிதனாக வாழ முடியும் என்கிற சிந்தனையைக் கவிஞர் இங்கு பதிவாக்குகிறார். அதேசமயம் அத்தகைய ஒரு மனிதன் உலகத்தை எல்லாம் தன்வயம் ஈர்க்கக்கூடிய தனித்த ஆற்றல் உடையவனாக இருப்பான். தன்னலம் பார்க்காமல் பிறர்நலம் நோக்கும் எண்ணம் உடையவனாக இருப்பான். அது எதைப் போன்றது என்று கவிஞர் குறிப்பிடும்போது, நீர்தேங்கி இருக்கக்கூடிய ஒரு குளத்தில் அல்லது பொய்கையில் எத்தனை உயிர்கள் வந்து நீர் அருந்தினாலும் அந்தக் குளத்திற்கு நீர் அருந்திய உயிர்கள் ஒன்றும் திருப்பிச் செய்வதில்லை. அதுபோல பிறர்நலம் பேண வேண்டும் என்ற கருத்தைப் பதிவாக்கியுள்ளார். மேலும்,

"மனிதன்புது மனிதன் பொது

நலமேவிய மனிதன் இனப்

புனிதம்பெறு வழியில்நடை

புரிவான் புகழ் உருவாகிட"

என்ற கவிதை அடிகளில் மானுடப் பிறப்பைப் புனிதம் பெற்ற பிறப்பாகக் கவிஞர் சுட்டிச் செல்கிறார் (Amirthaganesan, 2016).

## மௌனம் ஆற்றல் மிக்கது

ஓசைக்கும், மௌனத்திற்கும் இடையிலான இடைவெளி என்பது சற்று நீளமானதுதான். ஓசை என்பது சொற்கள் உரசிக் கொள்கிறபோது ஏற்படுகின்ற ஒலி என்றாலும்கூட அந்த ஓசை கேட்கக்கூடிய இடத்தைப் பொருத்தும் வெளிப்படக்கூடிய சொல்லின் கடினத்தைப் பொருத்தும் அது நன்மையுடையதாகவோ, தீமையுடையதாகவோ மாறக்கூடும். என்னதான் நன்மை தரக்கூடிய சொல்லாக இருந்தாலும்கூட அந்த ஓசை சில நேரங்களில் மனதை வருத்தக் கூடியதாகவும் அமைந்துவிடக்கூடும். அப்படி என்றால் கவிதை எப்போதுமே மௌனமாகத்தான் இருக்கும் என்பதை கவிஞர் தமிழன்பன் சொல்ல வருகிறார். தன்னுடைய சக்கரங்களுக்குப் பதிலாகச் சிறகுகள் என்ற ஒரு கவிதையில், ஓசை என்பது ஓயாமல் ஒலித்துக்கொண்டே இருப்பதனால் சிலபோது தாவரங்களிலும்கூட கருச்சிதைவு ஏற்படுகிறது என்று குறிப்பிடுகிறார் சுப்பிரமணியன் (Subramaniyan, 2005). அதேசமயம் அந்த சூரியனின் ஒளிக்கற்றைகளில்கூட ஓசை கேட்டு உடைந்து போகின்றன என்று பேசுகிறார். அதுமட்டுல்லாமல் இரைச்சல்களே இல்லாத ஒரு வீதியாக எதையாவது தேடிக்கொண்டு சென்றால் அங்கு நம்மால் நிம்மதியாக இருக்க முடியும் என்பதை சுட்டிக்காட்டுகின்றார். அதே கவிதைகளில்,

"மனிதரின் உதடுகளிலும்

ஓசைகள் காய்த்துத்

தெறித்து சிதறுகின்றன.

பூமிக் கோளத்தையே

ஒரு பலூனாக

ஊதி உடைத்துவிட

எத்தனிக்கும் இரைச்சல்கள்.

ஒட்டுமொத்தமாய்

ஊமைப்படுத்த வேண்டும் இன்றேல்

தெரிவு செய்து அவற்றுள்

சிலவற்றை மாத்திரை குறைத்து

மவுனத்தின் மார்பில்

மாலையாக்க வேண்டும்"

என்ற கவிதை அடிகளில் மௌனத்தின் மேன்மையைச் சுட்டும்வகையில் புல்லாங்குழலின் ஓசை இன்பமானதுதான் (Amirthaganesan, 2016). ஆனால் அதேசமயம் அது காயப்படுத்துமேயானால் மனிதமனம் துன்பப்படும் என்றும் ஈரமனதில் எலும்புகள் தேவையில்லை என்றும்; சத்தங்களுக்கு சக்கரங்களே வேண்டாம் என்றும் இனி பூஞ்சிறகுகளே அந்தச் சக்கரங்களுக்கு பொருத்துவோம் என்றும் ஒரு புதிய சிந்தனையை விதைத்துள்ளார்;. மனிதன் மௌனமாக இருக்கும்போதுதான் தன்னை உணர்ந்து கொள்கிறான். தியானம் என்றும், யோகம் என்றும், ஞானம் என்றும் பேசப்படுகின்ற இத்தகைய கூறுபாடுகளில் மௌனமாக இருக்கிறபோதுதான் ஆயிரம் மொழிகள் பேச முடியாத, ஆயிரம் மொழிகள் சொல்ல முடியாத கருத்தை மௌனத்தின் மூலமாக சொல்லிவிடமுடியும். மனித மனத்தில் சிந்தனை என்பது வளர்வதற்கும், மனித மனத்தின் மேன்மை என்பது நிலைபெறுவதற்கும், மௌனம் ஒரு காரணமாகும் என்பதைக் கவிஞர் இந்த வரிகளில் மிக அழுத்தமாகப் பதிவு செய்திருப்பதை அறியமுடிகின்றது.

மானுட வாழ்க்கை நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றது. இன்பம் - துன்பம், ஏற்றம் - இறக்கம், வெற்றி - தோல்வி, நன்மை - தீமை என்று எதிரும் புதிருமாக இணைந்திருக்கக்கூடிய இரு துருவங்களுக்கிடையே பயணிக்கக்கூடிய வாழ்க்கைதான் மனிதனுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் அதேசமயம் மென்மை ஆகவே இருந்துவிட முடியுமா, அவ்வாறு மென்மையாகவே இருந்தால் அவனுக்கு நன்மைகள் மட்டுமே கிடைத்துக் கொண்டிருக்குமா என்று கேட்கப்படுகின்ற வினாக்களுக்கு எல்லாம் சரியான ஒரு பதில் யாராலும் சொல்ல முடியாது ஏனெனில் எது மென்மையாக இருக்கிறதோ அது வன்மையாக மாறக்கூடிய காலச்சூழல் ஏற்படலாம். அத்தகைய காலச்சூழலுக்கேற்ப மனிதன் தன்னை மாற்றிக்கொண்டு எங்கு வன்மையாக இருந்தால் வெற்றி பெறமுடியுமோ அங்கு வன்மையாகவும், எங்கு மென்மையாக இருந்தால் நம்மை மற்றவர்கள் ஏற்றுகொள்கிறார்களோ, அங்கு மென்மையாகவும் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதைக் கவிஞர் கிழக்குக் கிளையில் என்கிற கவிதையில் குறிப்பிடுகிறார்.

"சமூக

இருட்டைச் சாடும்

வீரிய வாரியம் திறக்கட்டும்

வாழ்க்கை - ஒரு

பிருந்தாவனம் மட்டுமல்ல

பிரச்சனையும்தான்

எனவே

கற்பனைகளைச் சுமக்கும்

கண்களோடு மட்டுமல்ல,

கைகளில்

ஆயுதங்களோடும் புறப்படுவோம்"

என்ற கவிதை அடிகளில் மேற்கண்ட கருத்தை பதிவாக்கிக் காட்டுகிறார் (Amirthaganesan, 2016). மங்கலமாக இருக்கக்கூடிய மலர்களின் மகரந்தம் தூவி பொதுவுடைமை பொன்கனா கனியினம் பங்கினை அளிப்போம் என்று கவிஞர்; சொல்கிறார். அச்சமூகத்திற்கு உன்னால் எத்தகைய பயன் வினையும் என்று நீ கருதினால் இத்தகைய காரியத்தைச் செய்தால் இச்சமூகம் மகிழும் என்று உணர்ந்து கொண்டேயானால் கண்;டிப்பாக மென்மையை மட்டுமே கடைபிடிக்கக்கூடிய கூறுபாடு உன்னிடம் வந்து சேரும் என்று உறுதியாகப் பேசுவதை இந்தக் கவிதை சுட்டிக் காட்டுகிறது.

## முடிவுரை

கவிதையெனும் வாள்கொண்டு இச்சமூகத்தை மாற்றிவிட முடியும் என்ற ஆணித்தரமான நம்பிக்கையை ஊன்றுகோலாக் கொண்டுள்ள தமிழன்பனின் கவிதைகளில் மானுடத்தின் மேன்மைகள் வலியுறுத்தப்பட்டிருப்பதே, அவற்றின் மகத்துவத்தை அறியாமல் பிறருக்குக் கேடு செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ள கீழ்மைக் குணமுடையோரைச் சாடுகின்றார். பொய்யும், திருட்டும், பகையும், வெறுப்பும், ஏமாற்றமும் மட்டுமே தனது கைக் கருவிகளாகக் கொண்டு வஞ்சனை செய்வோருக்கு மத்தியில் ஒருவன் தனித்திருந்தும் விழித்திருந்தும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையைக் கவிதைகளின் மூலமாகத் தோற்றுவிக்கின்றார்.

## References

Amirthaganesan, T. (2016) Erode Tamilanban Aayiram, Vilikal Pathipagam, Chennai, India

Subramaniyan, N. (2005) Hiranaivu Nokkil Erodu Thamilanban Kavithaikal, Poompuhar Pathippagam, Chennai, India

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2024. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

K. Radha, Humanistic Thoughts in Tamilanban's Poems, Indian Journal of Tamil, 5(4), (2024) 18-23. https://doi.org/10.54392/ijot2444